# தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்

## கோயமுத்தூர் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

## (01.05.2015 முதல் 06.05.2015)

**அறிக்கை எண் 33/2015** **தேதி: 01.05.2015**

### மாநிலத்தின் கடந்த வார வானிலை

தமிழகத்தின் பெரும்பாலான பகுதிகளில் பகல் நேர வெப்பநிலை 30°செ முதல் 37°செ ஆகவும், இரவு நேர வெப்பநிலை 21°செ முதல் 29°செஆகவும் பதிவானது கொடைக்கானல் மற்றும் உதகமண்டலம் பகுதிகளில் பகல் நேர வெப்பநிலை 18°செ முதல் 23°செஆகவும், இரவு நேர வெப்பநிலை 10°செ முதல் 13°செ ஆகவும் பதிவானது. தமிழகத்தில் ஒரு சில இடங்களில் மிதமான மழை காணப்பட்டது.

### எதிர்பார்க்கப்படும் வானிலை கோயமுத்தூர் ( 02.05.2015 முதல் 06.05.2015)

வரும் நாட்களில் வானம் இலேசான மேகமூட்டத்துடன் காணப்படும். வறண்ட வானிலையே எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 35°செ முதல் 36°செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 24°செ முதல் 25°செ ஆகவும், காலை நேர காற்றின் ஈரப்பதம் 64 சதவிகிதமாகவும், மாலைநேர காற்றின் ஈரப்பதம் 38 முதல் 43 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு் 8 கி.மீ அளவுக்கு பெரும்பாலும் தென்மேற்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

| தேதி | மழை (மி.மீ) | அதிகபட்ச வெப்ப நிலை (°செ) | குறைந்த பட்ச வெப்ப நிலை (°செ) | மேக மூட்டம் (ஆக்டா) | அதிகபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (%) | காற்றின் வேகம் (கி.மீ/ மணி) | காற்று வரும் திசை |
|---|---|---|---|---|---|---|---|---|
| 02.05.15 | 0 | 35 | 24 | 3 | 64 | 43 | 8 | தென்மேற்கு |
| 03.05.15 | 0 | 35 | 24 | 3 | 64 | 43 | 8 | கிழக்கு |
| 04.05.15 | 0 | 36 | 25 | 3 | 64 | 38 | 8 | தென்மேற்கு |
| 05.05.15 | 0 | 36 | 25 | 3 | 64 | 38 | 8 | தென்மேற்கு |
| 06.05.15 | 0 | 36 | 25 | 3 | 64 | 38 | 8 | தென்மேற்கு |

**வேளாண் அறிவுரை**

- ✓ காற்றின் வேகம் அதிகமாக எதிர்பார்க்கப்படுவதால் கரும்பு பயிரின் எடையை குறைக்க முன்பருவம் நடவு செய்த கரும்புக்கு தோகை உரிக்க வேண்டும்.
- ✓ காற்றின் வேகம் அதிகமாக எதிர்பார்க்கப்படுவதால் நடவு செய்து 5 மாதம் மற்றும் அதற்கு மேலான வாழை மரங்களுக்கு முட்டு கொடுக்கவும்.
- ✓ காற்றின் வெப்பநிலை அதிகரித்து வருவதால் கால்நடை குடில்களுக்குள் குளிர்ச்சியை ஏற்ப்படுத்தி பால் உற்பத்தியை பராமரிக்கவும்.

**குறுஞ்செய்தி**

- ✓ காற்றின் வேகம் அதிகமாக எதிர்பார்க்கப்படுவதால் நடவு செய்து 5 மாதம் மற்றும் அதற்கு மேலான வாழை மரங்களுக்கு முட்டு கொடுக்கவும்.


**பேராசிரியர் மற்றும் தலைவர்**
**வேளாண் காலநிலைஆராய்ச்சி மையம்**
**த.நா.வே.ப.கழகம், கோவை.**